# ECHO OF HIS CALL

ECHO OF HIS CALL
REACHING NATIONS
SINCE 1969
1969 TO 2026

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXXI | YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 JANUARY | No. 01

## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### யோவேல் 2:21-26

21. தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

22. வெளியின் மிருகங்களே, பயப்படாதேயுங்கள்; வனாந்தரத்திலே மேய்ச்சல்கள் உண்டாகும்; விருட்சங்கள் காய்களைக் காய்க்கும்; அத்திமரமும் திராட்சச்செடியும் பலனைத் தரும்.

23. சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்.

24. களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்.

25. நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரியசேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்.

26. நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

## நீங்கள் இழந்தவற்றை இந்த புதிய ஆண்டில் பெற்றுக் கொள்வீர்கள்!

சகோதரி ஏஞ்சல்





அனைவருக்கும் இனிய மற்றும் ஆசீர்வாதமான புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** மூலம் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்தப் புத்தாண்டில் பிரவேசித்துள்ள நாம், இயல்பாகவே இதுவரை நடந்தவற்றைப் பின்னோக்கிப் பார்த்து, இனி வரப்போகின்றவைகளை எதிர்நோக்குகிறோம். சில ஆண்டுகள் போராட்டங்களாக உள்ளன; ஏனையவை திருப்புமுனைகளின் காலங்களாகவும் காணப்படுகின்றன. நாம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருக்கும் வெற்றிகள், இறுதியாக வெளிப்படும் தருணமாக, தேவன் தனது தெய்வீக திருப்பங்களின் மூலம் மாற்றுகிறார் என்பதை 1நாளாகமம் 18:1நமக்கு நினைவூட்டுகிறது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

அழைப்பின் எதிரொலி!



கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு மொழிகளில்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு - காலை 5.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள் ! பிறருக்கும் Share பண்ணுங்கள் !!

ECHO OF HIS CALL
REACHING NATIONS
SINCE 1969

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





. . . உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்.

- உபாகமம் 11:12

கர்த்தருக்குள் பிரியமான அன்பு சகோதர, சகோதரிகளே!

உலக இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்கள் 2026 ஆண்டுக்கான புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம். நீங்கள் குடும்பத்துடன் நலமுடன் முன்னேற ஜெபிக்கிறோம்.



சபை ஊழியர்கள் பொறுப்பாளர்கள் கூட்டம்

கடந்த வருடம் நம்மில் பலர் பல கஷ்டங்களையும், வேதனைகளையும் சந்திக்க நேர்ந்திருக்கலாம். நம் தேவனும் மௌனமாயிருப்பதுபோல் தோன்றியிருக்கலாம். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள யோசேப்பு என்னும் பிள்ளையாண்டான் பாழான கிணற்றிலிருந்து தேசத்து அதிபதியாக உயர்த்தப்பட்டார். பல்வேறு கஷ்டங்களுக்குட்படுத்தப்பட்டார். ஆனால், நமது ஆண்டவர் அவரிடம் பேசி அவரை சமாதானப்படுத்தியதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. இதே அனுபவம் நம் உலக வாழ்க்கையில் நமக்கும் ஏற்படலாம். ஆனால், ஏற்றக்காலத்தில் தேவன் தம் மக்களை உயர்த்துவார்.

**ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் - 1 பேதுரு 5:6.**

புதிய 2026–ம் ஆண்டு உங்களுக்கு ஓர் சீரமைக்கும் ஆண்டாக இருக்கும். ஓர் புதிய பாதையைத் திறந்து, அதன் வழியாக உங்களுக்கு சிறப்பான நன்மைகளைத் தருவார்.

**நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் - ஏசாயா 66:22.**

இப்புதிய ஆண்டில் நாங்கள் செய்ய வேண்டிய ஊழியங்கள் ஏராளமாயிருக்கின்றன. மனித சக்தியாலும், முயற்சியாலும் அவற்றை வெற்றியுடன் முடிக்க இயலாது. நமது ஊழியம் சம்பந்தமான பிரயாணங்களும் பல உள்ளன. நாங்கள் உங்களுக்காக ஜெபிப்பது போல நீங்களும் எங்களுக்காக ஜெபிக்க வேண்டும். நீங்கள் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

## நீங்கள் செய்ய வேண்டிய மூன்று பிரதான காரியங்கள்:

1. உங்கள் சபையையும், உங்கள் போதகரையும் நேசியுங்கள். சபை ஆராதனைகளுக்குத் தவறாமல் செல்லுங்கள். உபதேசங்களைக் கருத்தாய் கடைபிடியுங்கள்.
2. உங்கள் ஜெப நேரங்களை முக்கியப்படுத்தி, தவறாமல் நேரம் எடுத்து ஜெபியுங்கள். தேவ பிரசன்னத்திலேயே வாழுங்கள்.
3. உங்களுக்கு தேவன் தந்துள்ள சரீர சுகம், பொருளாதாரம் போன்ற உங்கள் ஆசீர்வாதங்கள் எல்லாவற்றின் மூலமும், உங்களால் இயன்றபடி தேவனுக்குக் கொடுத்து ஊழியம் செய்யுங்கள்.

இந்த ஆண்டு உங்களுக்கு பாதுகாப்பானதும், நன்மை நிறைந்ததும், தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்கள் யாவும் நிறைவேறி சிறப்பானதாகவும் இருக்க ஜெபிக்கிறோம்.

தேவகிருபை உங்களோடு இருப்பதாக!




கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் சகோதரரான
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்,**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி



**தாவீது பெலிஸ்தியர்களுடன் அநேக வருடங்களாக யுத்தம் பண்ண வேண்டியிருந்தது**

தாவீது பெலிஸ்தியர்களுடன் அநேக வருடங்களாக யுத்தம் பண்ண வேண்டியிருந்தது. இருப்பினும், ஏற்ற நேரத்தில், எல்லாம் மாறியது. மேற்குறிப்பிட்ட இந்த வேதவசனம் இத்தகைய மாற்றத்தைக் குறிக்கிறது. வாக்குத்தத்தம் வெளிப்படத் தொடங்கியபோது, எதிரிகள் அடக்கப் பட்டனர்.

2026–இல் நாம் அடியெடுத்து வைக்கும்போது, கர்த்தருடைய வேளை ஒருபோதும் தாமதமாகாது என்பதை இந்தப் பகுதி நமக்கு உறுதியளிக்கிறது. நம்மால் அதைக் காண இயலாவிட்டாலும் அவரது திட்டங்கள் தொடர்ந்து நிறைவேறி வருகின்றன.

**தேவன் செயல்படும்போது, அது உச்சமான வெற்றி!**

**... தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, காத் பட்டணத்தையும் அதின் கிராமங்களையும் பெலிஸ்தரின் கையிலிருந்து பிடித்துக் கொண்டான்.** 1நாளாகமம் 18:1.




பல ஆண்டுகளாக, பெலிஸ்தர் இஸ்ரவேலரைக் கொள்ளையடித்தனர். இஸ்ரவேலர்கள் மட்டுமின்றி, அவர்களின் குடும்பங்கள், இஸ்ரவேலரின் ஆசாரியன் ஏலியும் கூட இழப்புக்குப் பின் இழப்புகளைச் சந்தித்தனர். அவர்கள் தங்களின் கண்ணியத்தையும், உடன்படிக்கைப் பெட்டியையும் இழந்தனர். தோல்விதான் அவர்களின் விதி என்று தோன்றியது. எதிரி வலிமையானவனாகத் தோன்றினான். தேவனோ அமைதியாக இருப்பது போல் தெரிந்தது.

ஆனால், தேவனே இப்பிரச்சினையில் தலையிட்டு செயல்பட்டார்; இஸ்ரவேலரின் வெற்றி உறுதியானது.

தாவீது பெலிஸ்தியரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி அவர்களது கிராமங்களையும் பெலிஸ்தரின் கையிலிருந்து பிடித்துக் கொண்டார். இனி



**இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள் – யாத்திராகமம் 14:13**

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India
Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org

அவர்கள் இஸ்ரேலுக்கு எதிராக எழ முடியாது என்று வேதாகமம் கூறுகிறது. அதாவது, பெலிஸ்தியர்கள் மீண்டும் மீண்டும் இஸ்ரேலுக்கு எதிராக வந்து கொண்டேயிருந்தனர். ஆனால் இப்போது கர்த்தருடைய வல்லமையானது, அவர்கள் எப்போதுமே எழ முடியாத படி தாவீது மூலம் அவர்களை நசுக்கியது.

இது கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் அவர் அளித்த வாக்குத்தத்தம் ஆகும்; உங்களது போராட்டங்களில் தேவன் தலையிடும்போது உங்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோகும்.

... **இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள்.** யாத்திராகமம் 14:13. இது தேவனின் அதிகாரத்தையும், அவர் தேவ மக்களுக்கு அளித்த விடுதலையையும் குறித்த ஒரு நினைவூட்டல் ஆகும்.

நம்மிடமிருந்து பல ஆண்டுகளாக, நமது சத்துரு அமைதி, ஆரோக்கியம், பொருளாதாரம், உறவுகள், வேலை, குடும்பம், பதவி உயர்வு, ஆசீர்வாதங்கள் போன்ற பல நன்மைகளை நிறையத் திருடிக் கொண்டான்.

ஆனால், 2026–ஆம் ஆண்டு சத்துரு நம்மிடமிருந்து திருடியதை, **நாம் திரும்பப் பெறும் ஆண்டு** என்று கர்த்தர் அறிவிக்கிறார்! ஆமென்!

தாவீது எதிரிகளை வென்று கட்டுப்படுத்தினார். அவர்களால் மீண்டும் ஆதிக்கம் செலுத்த இயலவில்லை. தாவீது வெற்றியாளரானார். இந்த வருடம் நீங்கள் இனி எதிரியின் தாக்குதல்களால் கட்டுப்படுத்தப்படாமல், இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தில் நடக்க வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன். உங்கள் சூழ்நிலைகள், சுற்றியுள்ள பிரச்சனைகள், சவால்கள் மற்றும் கடந்த ஆண்டுகளின் தோல்விகளை நீங்கள் ஜெபித்து கட்டுப்படுத்துவீர்கள்.

**வெட்டுக்கிளி எதை விழுங்கினாலும், அதை மீட்டெடுக்கக்கூடிய ஆண்டாக, இந்த புதிய ஆண்டு அமையும்** (யோவேல் 2:25).

உங்களுக்குச் சொந்தமானதைப் பாதுகாப்பதற்கான ஆண்டு மட்டுமல்ல, நீங்கள் இழந்ததைத் திரும்பப் பெறுவதற்கான ஆண்டும் கூட.

## தாவீதின் காத் மீட்டெடுப்பு – வெற்றியின் சின்னம்!

பெலிஸ்தியர்களை அடக்கிய பிறகு, தாவீது அவர்களின் வலிமையான மற்றும் மிகவும் செல்வாக்கு மிக்க நகரமான காத் நகரத்தை மீட்டெடுத்தார்.

எபிரெய மொழியில், மெத்தேக் அம்மா என்றால் **கடிவாளத்தின் தாய் நகரம்** – கடிவாளமானது கட்டுப்பாடு மற்றும் அதிகாரத்தைக் குறிக்கிறது. அதிகாரத்திற்கெல்லாம் தாய் என்பது பொருளாகும். அதாவது, காத்தை வைத்திருந்தவர் முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தார் என்பதாகும்.

காத் நகரம் என்பது இஸ்ரவேலரின் தோல்வியைக் குறிப்பதாக இருந்தது. மேலும், **காத் நகரம் என்பது கோலியாத்தின் சொந்த ஊராகவும், ஒரு காலத்தில் இஸ்ரவேலை பயமுறுத்திய ராட்சகர்களின் சொந்த ஊராகவும் இருந்தது.** (1 சாமுவேல் 17:4 & 2 சாமுவேல் 21:19–22). ஆனாலும், தேவனுடைய வல்லமையை எவராலும் எதிர்த்து நிற்க முடியாது.

ஒரு காலத்தில் தோல்வியைக் குறித்த ஒன்று வெற்றியின் அடையாளமாக மாறியது.

அதேபோல், நீங்கள் ஒரு காலத்தில் தோல்வியைச் சந்தித்த பகுதிகள்தான் உங்கள் மிகப்பெரிய வெற்றியின் இடங்களாக மாறும். தேவன் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற உண்மையுள்ளவர்.

## தேவன் தாவீதுக்கு ஏன் கிருபை செய்தார்?

தாவீது குறையற்றவர் அல்ல. அவர் உணர்ச்சிவசப்படுபவர், குறைபாடுள்ளவர், உடைந்தவர்... ஆனாலும், தேவன் ... **தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்** ... என்று அப்போஸ்தலர் 13:22–ல் சாட்சியுங் கொடுக்கின்றார்.

தாவீதுக்கு மட்டுமின்றி, அவரது தலைமுறையினருக்கும் தேவ கிருபை கிடைத்தது. அதன் ரகசியம்தான் என்ன?

## 1. தாவீது கர்த்தருக்கு முன்னுரிமை அளித்தார்!

தாவீது எப்போதும் கர்த்தரை முதன்மையாக வைத்தார். தோல்வியிலும்



**உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்**

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
Diploma in Theology & Bachelor of Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும்!
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல்: sam@echoofhiscall.org / இணையதளம்: www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



பகிர்தல் (Share) (கலாத்தியர் 6:2), உதவி செய்தல் (Support) (ரோமர் 12:13) மற்றும் துரிதப்படுத்துதல் (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2026 ஜனவரி 19 முதல் 2026 பிப்ரவரி 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜனவரி 19 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் சிறப்பான முறையில் நடைப்பெற்றமைக்காக ...

ஜனவரி 20 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 21 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 22 ⇨ சந்திக்கப்படாத மக்களை சென்றடையும் **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் 5 நிமிட செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 23 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரிகள்** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்விகள்** ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 24 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஜனவரி 25 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

ஜனவரி 26 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் நல்ல உடல்நலத்துடனும் தேவபாதுகாப்புடனும் இருப்பதற்காக ...

ஜனவரி 27 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...

ஜனவரி 28 ⇨ நமது பங்காளர்களின் ஜெபம் மற்றும் பொருளாதார ஆதரவிற்காக ...

ஜனவரி 29 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 30 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளின் போதகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 31 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளின் குழந்தைகள் ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

பிப்ரவரி 01 ⇨ நமது தலைமைப் போதகரின் ஊழியப் பயணங்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

பிப்ரவரி 02 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

பிப்ரவரி 03 ⇨ நமது தலைமைப் போதகருக்கு 2026–ஆம் ஆண்டிற்கான புதிய தரிசனத்தை கொடுத்த கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

பிப்ரவரி 04 ⇨ இஸ்ரேல், பாலஸ்தீன நாடுகளில் சமாதானம் பரவ ...

பிப்ரவரி 05 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி...

பிப்ரவரி 06 ⇨ அனைத்து கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

பிப்ரவரி 07 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

பிப்ரவரி 08 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

பிப்ரவரி 09 ⇨ கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் மிஷனரிகள் மீதான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டி ...

பிப்ரவரி 10 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக...

பிப்ரவரி 11 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக...

பிப்ரவரி 12 ⇨ இந்த வருடத்தின் **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க...

பிப்ரவரி 13 ⇨ அரசு பொதுத்தேர்வுக்கு தயாராகும் நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சியடைய...

பிப்ரவரி 14 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மற்றும் **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களின் பாதுகாப்பிற்காக ...

பிப்ரவரி 15 ⇨ நோய், வறுமை மற்றும் பட்டினியால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிலிருந்து மீண்டு வர...

பிப்ரவரி 16 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயப் பழக்கம் கொண்டோர் மனந்திரும்ப ...

பிப்ரவரி 17 ⇨ நமது அனைத்து பொருளாதாரத் தேவைகளும் சந்திக்கப்பட வேண்டி...

பிப்ரவரி 18 ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர் மொபைல் போன் மற்றும் இணையதள விளையாட்டுகளின் அடிமைத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

கூட, அவரது முதல் செயல் மனந்திரும்புதலும், சரணடைதலுமாக இருந்தது.

அவர், ... **உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்** என்று சங்கீதம் 51:11-ல் மன்றாடுவதை நாம் காணலாம்.

**மனிதனுடைய கைகளில் விழுவதைவிட இரக்கமுள்ள கர்த்தருடைய கைகளில் விழுவதைத் தேர்ந்தெடுத்தார்.** (2 சாமுவேல் 24:14). அவர் தனது கிரீடம், சிங்காசனம் மற்றும் நற்பெயரைவிட தேவனுடைய பிரசன்னத்தை அதிகமாக கனப்படுத்தினார்.

சத்துரு திருடியதை மீட்டெடுக்க விரும்பினால், இந்த ஆண்டின் தொடக்கத்தில் நாமும் கர்த்தருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். நமக்கு எதுவும் புரியாவிட்டாலும் அவருடைய வழியை விசுவாசிக்க வேண்டும்.

**ஆண்டவரே, உமது வழிகள் எனக்குப் புரியாமல், அது அர்த்தமற்றதாகக் காணப்பட்டாலும்கூட நீர் என்னை உமக்குள் வழிநடத்தி, என்னை நிலைநிறுத்துவீராக!** (நீதிமொழிகள் 3:5-6) என்பதே நமது ஜெபமாக இருக்கட்டும்.

## 2. தாவீதின் தேவராஜ்ய சிந்தனை!

தமது ஆலயத்தைக் கட்ட தேவன் தாவீதை அனுமதிக்கவில்லை. எனினும், அதற்குத் தேவையான அனைத்தையும் தாவீது சாலொமோனுக்காக சேகரித்து வைத்தார். மேலும் தேவையான செல்வத்தையும் சேகரித்தார். சமாதானத்தைப் பாதுகாத்தார். அடுத்த தலைமுறைக்கு அடித்தளம் அமைத்தார்.

தாவீதின் அக்கறை தன்னுடைய தனிப்பட்ட மகிமைக்காக அல்ல, கர்த்தருடைய மகிமைக்காக மட்டுமே இருந்தது.

இன்றைய உலகில், பலர் தனக்கான அங்கீகாரத்தையும், தன்னைப் பின்பற்றுபவர்களையும், புகழ்ச்சியையும் தேடுகிறார்கள். ஆனால், உண்மையான தேவ ஊழியர்கள் கர்த்தருடைய ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காக அமைதியாக உழைக்கிறார்கள். பிறர் கண்ணுக்குத் தெரியாத உங்கள் உழைப்பைக் கர்த்தர் காண்கிறார். அதற்கேற்ற பிரதிபலனையும் அவரே அளிப்பவராக இருக்கிறார்.

பரலோகத்தில் இருப்பதுபோல பூமியிலும் தேவனுடைய ராஜ்யம் வரவேண்டும் என்று நாம் விரும்பினால், நாம் ஒரு தேவராஜ்ய மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சமூக ஊடகங்களில் பாராட்டுகளையும், சந்தாதாரர்களையும் யார் பெறுகிறார்கள் என்பது முக்கியம் அல்ல. இது, இயேசு கிறிஸ்து தொடர்பான நிகழ்ச்சிகளைப் பின்தொடர்பவர்கள் அல்லது சந்தாதாரர்களைச் சேகரிப்பது பற்றியதும் அல்ல. அது நாம் செய்யும் தேவ ஊழியத்தைப் பற்றியதாகும்.

2026-ஆம் ஆண்டை நாம் நமக்குரியவைகளைத் தாண்டி தேவனுடைய ராஜ்யத்தின் நோக்கத்தை சிந்திக்கும் ஆண்டாக - தேவ ராஜ்ய நோக்கத்திற்காகச் செயல்படுங்கள்.

**நீங்கள் எதைச் செய்தாலும், அதை உங்கள் முழு பலத்தோடும் செய்யுங்கள்** (பிரசங்கி 9:10). அது தேவனுடைய மகிமைக்காக இருக்கட்டும்.

## 3. தாவீது எல்லாவற்றிலும் தேவனுக்கு மகிமையை கொடுத்தார்!

ஒவ்வொரு வெற்றியும் தேவனிடமிருந்து வந்தது என்பதை தாவீது அறிந்திருந்தார்.

அவர் வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து கிட்டிய தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகிய பொருட்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்தார்.

**பொற்பரிசைகளை தாவீது எடுத்து ... எருசலேமுக்குக் கொண்டு வந்தான் ... கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணினான்.**
- 2 சாமுவேல் 8:7-12

ஒரு காலத்தில் எதிரியின் பெருமையாக இருந்ததை தாவீது எடுத்து, தேவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். வெண்கலக் கடல் என்னும் தொட்டி, தூண்கள் மற்றும் பிற புனிதப்பொருட்களைக் கர்த்தருக்கு ஆலயம் கட்ட சலொமோனிடம் விட்டுவிட்டார்.

எனவே, ... **தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்** என்று 2 சாமுவேல் 8:6-ல் வேதம் கூறுகிறது.

தாவீது எவ்வளவு அதிகமாகக் கர்த்தரைக் கனம் பண்ணினாரோ, அவ்வளவு அதிகமாகக் கர்த்தர் தாவீதை கனப்படுத்தினார். அவருடைய எதிரிகள்கூட அவருக்குக் காணிக்கை செலுத்தினர்.

**தாவீது ஆதாதேசருடைய எல்லா இராணுவத்தையும் முறிய அடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ கேட்டபோது, ஆதாதேசர் தோயீயின்மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக் கொண்டிருந்தபடியால், ராஜாவாகிய தாவீதின் சுக செய்தியை**



**தாவீது வெள்ளியும், பொன்னும் வெண்கலமுமான அனைத்தையும் தேவனுக்கு கொடுத்தார்!**

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G-கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G-யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி விநியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
& (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. இந்தி ஆராதனை – புதன் இரவு 7.00 மணி
25. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
26. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
27. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
28. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
29. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
30. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
31. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
32. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
33. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
34. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
35. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
36. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி


தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## தேவனுடைய வழிநடத்துதலும், பாதுகாப்பும்!

அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். சங்கீதம் 145 :19.

சென்னை, சேப்பாக்கம் என்ற மக்கள் நெருக்கம் நிறைந்த இடத்தில் 1982–ம் ஆண்டு முதல் சபை ஊழியம் ஆரம்பிக்க தேவன் எனக்கு உதவி செய்தார். அதுமுதல் அப்பகுதியில் உள்ள பல கட்டிடங்களுக்கு ஆராதனை ஸ்தலத்தை மாற்ற வேண்டியதாயிற்று. இதற்கு பொருளாதாரக் கஷ்டங்களும், பலருடைய எதிர்ப்புகளும், பொறாமைகளுமே காரணங்களாயிருந்தன.

கடைசியில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சி.என். கிருஷ்ணசாமி சாலையில் உள்ள திரு. ஜார்ஜ் அவர்களுடைய ஓர் தேநீர் விடுதிக்கு உட்பகுதியில், காற்று வசதியற்ற ஓர் அறையில் ஞாயிறு ஆராதனைகளை நடத்திக் கொண்டு வந்தோம்.

அப்போது ஒரு ஞாயிறு ஆராதனையின்போது தேவ ஆவியானவர் அந்த சேப்பாக்கம் பகுதியில் ஓர் மிகவும் வசதியான ஆராதனை ஸ்தலத்தை தேவன் தரப்போவதாக என் உள்ளத்தில் விசுவாசிக்க ஏவினார். இதற்காக, சபையாக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும் என்றும், அதை சபை மக்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் நான் விரும்பி, இந்தக் காரியத்தை அப்படியே சபை மக்களுக்கு அறிவித்தேன்.

- இதை கேட்டவுடனே சபை மக்கள் தங்கள் கடைக் கண் பார்வைகளால் என்னைப் பரிகசித்தனர்.
- நம்முடைய பொருளாதார நிலையின் அடிப்படையில் சேப்பாக்கம் பகுதியில் இடம் வாங்க முடியுமா ? என்று பலர் கேள்வி கேட்டனர்.
- அப்படி பணம் இருந்தாலும், சேப்பாக்கம் பகுதியில் எங்கே விற்பனைக்கு இடம் இருக்கிறது ? என்று என்னைப் பலர் விசுவாச நெருக்கடி நிலைக்கு உட்படுத்தினர்.
- கர்த்தருடைய பெயரைச் சொல்லி இப்படி நடக்க முடியாத காரியங்களைச் சொல்லலாமா ? என்று பலர் சந்தேகப்பட்டனர்.

இதுபோல் பல குழப்பமான சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டேன். இந்த விசுவாச சவாலை ஏற்கவும், என்னுடன் நிற்கவும் யாரும் முன்வரவில்லை.

"கிறிஸ்தவ ஊழியர்களுக்கு வேறு வேலை இல்லை. எனவே, இப்படித்தான் எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள்" என்று பொதுவாக என்னை மக்கள் அங்கீகரிக்கவில்லை.

ஆனால் நான் மனம் தளரவில்லை. மாறாக, **விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து**வின்மேல் (எபிரெயர்12:1) முழுமையாகச் சார்ந்து கொண்டேன். அப்போது ஆண்டவர் **யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார். இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்.** ஏசாயா 41:14.15 என்ற வசனத்தின்படி என்னைத் தேற்றினார்.

நாட்கள் கடந்தன. எல்லா மக்களுடைய கண்களுக்கும் முன்பாக ஆண்டவர் என்னை ஆசீர்வதித்து, அவருடைய மகாப்பெரியக் கிருபையால் அதே சென்னை, சேப்பாக்கத்தில் தற்போது நாம் பயன்படுத்தும் இடத்தைத் தந்தார்.

இடம் கிடைத்தபின்னர், எனக்குப் பணவுதவி செய்ய முன்வர யாருமே இல்லை. ஆனால், நான் அப்போது அரசாங்கத்தில் பணி புரிந்ததால், அரசாங்கமே எனக்கு இக்கட்டிடத்தை வாங்க முன் பணம் கொடுத்தது. எவ்வளவு ஆச்சரியமான ஆண்டவர் இயேசு கிறிஸ்து. **கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.** சங்கீதம் 34:8.

இந்தச் செய்தியை எழுதும் இந்த நாளில்கூட என் விசுவாச வாழ்க்கைப் பாதையானது மிகவும் கரடுமுரடானதும், சவால் நிறைந்ததுமாய்த்தான் இருக்கிறது.

எந்தவிதமான நிரந்தர வருமானமும், எந்தவிதமான பணபலமும், எந்தவிதமான ஆள்பலமும் இல்லாத மிகவும் நிர்ப்பந்தமான நிலையில்தான் இன்றும் வாழ்கிறேன். எனவே, தேவன் என் கையில் கொடுத்திருக்கும் **அழைப்பின் எதிரொலியின்** 16 மொழி மாதப் பத்திரிகைகள், 3 மொழி தபாற்கல்வி, **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** பகுதிநேர மற்றும் முழுநேர வேதாகமக் கல்வி, ஞாயிறுதோறும் 7 ஆராதனைகள் நடைபெறும் தலைமைச் சபை ஊழியங்கள், **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** (கிராம உயர்நிலைப்பள்ளி), சுவிசேஷ அச்சகம், சுவிசேஷ ஊழியங்கள் முதலிய எல்லா ஊழியங்களையும் அவற்றின் நிர்வாக அலுவலகங்களையும் நடத்துவதில் சொல்ல முடியாதவைகளும், சொல்லி முடியாதவைகளுமான பல்வேறு கஷ்டங்களும், சவால்களும், தோல்விகளும் எனக்கு உண்டு.

தூங்க முடியாத இரவுகளும், தூக்கம் அற்ற இரவுகளும் என் அனுபவமாக இருக்கின்றன. உண்மையான தேவனுக்கென்று உழைப்பவர்களுக்கு இந்த உலகமும், உலகமக்களும் கைகொடுக்க மாட்டார்கள் என்பதை நான் கண்கூடாக அனுபவ ரீதியில் காண்கிறேன். காரிருளும், நெருக்கங்களும், நம்பிக்கையற்றதுமான இந்த உலக வாழ்வில் இயேசு கிறிஸ்து மட்டுமே உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதை ஒவ்வொரு நிமிடமும் நான் கற்று அறிந்து



வருகிறேன். ஏனென்றால் அவர்தான் என்னை நடத்துகிறார் என்பதை அனுதினமும் நான் அனுபவிக்கிறேன். கீழ்வரும் பாடல் வரிகள் எனக்கு மிகவும் பொருத்தமும், விருப்பமுமாக இருந்து வருகிறது.

**காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்!**

**வேறொளியில்லை, வீடும் தூரமே, நடத்துமேன்!**

**நீர்த்தாங்கின் தூரக்காட்சி ஆசியேன்;**

**ஓரடி மட்டும் என்முன் காட்டுமே.**

என் அனுதின ஊழிய வாழ்க்கையின் பாதை மிகவும் கடினமானதுதான். ஆனால் என் வேலையை முடித்தபின், என் சொந்த நாட்டுக்கு சென்று, என் சொந்த வீட்டினை சுதந்தரித்து, என் நேசர் இயேசு கிறிஸ்துவின் பொன்முகத்தை முத்தம் செய்யும் அந்த நல்ல நாளுக்காக அனுதினமும் காத்திருக்கிறேன். அந்த நாள் நல்ல நாள்! பாக்கிய நாள்!!

நண்பரே, நீங்களும் ஆயத்தமா?

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

**விசாரிக்கவும், அவன் ஆதாதேசரோடே யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்ததற்காக அவனுக்கு வாழ்த்துதல் சொல்லவும், தோயீ தன் குமாரனாகிய யோராமை ராஜாவினிடத்தில் அனுப்பினான். மேலும் யோராம் தன் கையிலே வெள்ளியும், பொன்னும் வெண்கலமுமான தட்டுமுட்டுக்களைக் கொண்டு வந்தான்.** 2 சாமுவேல் 8:9,10.

தாவீது இவற்றையெல்லாம் கர்த்தருக்கு அர்ப்பணித்தார்.

அன்பான சகோதர, சகோதரிகளே! நாம் பெற்றுக் கொண்டிருக்கும் அனைத்தும் தேவனுக்கு சொந்தமானது என்பதை இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே தீர்மானிப்போம்.

**ஒவ்வொரு வெற்றியும், வாய்ப்பும், ஆசீர்வாதமும் அவரிடமிருந்து நமக்காக இறங்கி வருகிறது** (யாக்கோபு 1:17)

தேவன் நமக்குக் கொடுத்த மிகப்பெரிய ஈவாகிய – அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை – நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

நாம் நம்பிக்கையுடன் நிற்கும்படி அவர் நமது வேதனையைச் சுமந்தார். அவர் நம் பாவத்தையும், சாபத்தையும் ஏற்றுக் கொண்டு நம்மை ஒரு ஆசீர்வாதமாக மாற்றினார்.

**இந்த ஆண்டு
உங்கள் மறுசீரமைப்பும்,
ஜெயத்திற்குமான ஆண்டு!**

பிரியமானவர்களே, 2026 என்பது உங்களிடம் உள்ளதைப் பாதுகாப்பதற்கான ஒரு ஆண்டு மட்டுமல்ல.

சத்துரு உங்களிடமிருந்து திருடியதைத் திரும்பப் பெறுவதற்கான ஒரு ஆண்டு.

இழந்த நிலத்தை மீட்டெடுக்கவும், மகிழ்ச்சியை மீட்டெடுக்கவும், உடைந்ததை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஒரு ஆண்டு.



**உங்கள் வாழ்க்கையில் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட தேவனுடைய கிருபையையும், வெற்றியையும் காண்பீர்கள்**

## தாவீதைப் போலவே நீங்கள்!

- தேவனுக்கு முன்னுரிமை கொடுங்கள்.
- தேவராஜ்ய மனநிலையுடன் வாழுங்கள்.
- உங்களிடம் உள்ள அனைத்தையும் கொண்டு அவரைக் கனப்படுத்துங்கள்.

... உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பிரபஞ்சத்திற்கு (இயற்கைக்கு) அப்பாற்பட்ட தேவனுடைய கிருபையையும், வெற்றியையும் காண்பீர்கள்.

**... தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.** 2 சாமுவேல் 8:6.

2026–இல் இது உங்கள் சாட்சியாக இருக்கட்டும். நீங்கள் எங்கு சென்றாலும் கர்த்தர் உங்களுக்கு வெற்றியைத் தருகிறார்.



**கர்த்தர் தாவீதுக்கு போன இடத்திலெல்லாம் வெற்றியைக் கொடுத்தார்**

ஒரு காலத்தில் பயத்தைக் கொண்டுவந்த இடம் உங்கள் விசுவாசத்தின் கோட்டையாக மாறட்டும்.




கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! வெற்றிகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள்!!

************

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– ஆசிரியர்**

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

**E.mail : sam@echoofhiscall.org**

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ **வருட சந்தா ரூ. 100/–** ☆ **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 29th DECEMBER 2025**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**